# தேசிய வீடமைப்பு செயற்திட்டம்: யாழ் மாவட்டத்தில் மணியந்தோட்ட கிராமத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**ரனுசியா, ஜெ., சிறீகாந்தன்,ச.**
சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
jeevaranusiya96@gmail.com

*மனித வாழ்வின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாக வீடு அமைகின்றது. உலகின் பெரும்பாலான சமூகங்கள் அனுபவிக்கும் சிக்கலான பிரச்சினையாகவும் காணப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கத்தினால் பல கொள்கைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. இலங்கையில் சுமார் 22 வீதமான மக்கள் வீடமைப்பு வசதிகள் இன்மையால் இன்னல்களை அனுபவித்து வருவதாக கூறிய அமைச்சர் சயித் பிரேமதாஸ தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் நாடளாவிய ரீதியில் 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019 வரையான காலப்பகுதி வரை காணியற்றவர்களுக்கு இலவசமாக காணிகள் வழங்கியதுடன், வீடற்றவர்களுக்கு நிரந்தர வதிவிட வசதிகளை ஏற்படுத்தும் கொள்கையின் நிமித்தம் "மாதிரி கிராமம்" என்னும் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கையின் பல்வேறு மாவட்டங்களுக்கும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மானிய நிதி உதவியுடன் வீடற்றவர்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்தினார். இத்திட்டமானது "நாட்டில் ஒரு குடிசை வீடுகளும் இருக்கக்கூடாது" எனும் தொனிப் பொருளுடன் மக்களின் செழிப்பான எதிர்கால வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்குடன் கொண்டு வரப்பட்டுள்ளது. தேர்தலின் போது சயித் தோல்வியுற்றதனால் இக்கொள்கை இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன் தெரிவு செய்யப்பட்டுள்ள மக்களின் அன்றாட வாழ்வில் சமூக, பொருளாதார, பண்பாட்டு ரீதியாக மாற்றங்களினையும் இது ஏற்படுத்தியுள்ளது. யாழ் மாவட்டத்தில் நல்லூர் பிரதேச பிரிவுட்குட்பட்ட மணியந்தோட்ட கிராமத்தினை ஆய்வு புலமாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றுள் முக்கிய முடிவுகளாக வீட்டினை தங்களது சொந்த செலவில் முழுமையாக கட்டியவர்களில் 15.3%மானோரும், தமது வாழ்வாதாரம் சார்ந்து 84.7% முழுமையாக கட்டாமல் பல சவால்களினை தமது அன்றாட வாழ்வில் அனுபவிப்பவர்களாக காணப்படுகின்றனர். இவ்வீட்டுத்திட்டம் முழுமையடையாத காரணத்தினால் ஆய்வுட்குட்பட்ட மக்களில் அதிகமானோர் (57.6%) வீட்டுத்திட்டம் அனுமதிக்கப்பட்ட காணியிலுள்ள தற்காலிக வீடுகளில் வாழ்வபர்களாகவும், வீட்டின் இடவசதிகளின்மையினாலும் வீடு கட்டி குறையில் உள்ளமையினாலும் வீடுகளில் தங்க முடியாது வீட்டுத்திட்ட காணியை விட்டு தள்ளிவாழ்பவர்களாக (6.8% மானோர்) வாழ்கின்றனர். வீட்டுத்திட்டத்தில் அனுமதிக் கப்பட்ட வீட்டில் வாழ்பவர்களாக 35.6% மானோர் காணப்படுகின்றனர். அதிகமானோர் முழுமையாக வீட்டை கட்டி முடிக்காது தற்காலிகமாக இருப்பிட வசதிக்காக வாழ்பவர் களாக காணப்படுகின்றனர். சமூக முன்னேற்றத்திற்காக கொண்டுவரப்படுகின்ற சமூகக் கொள்கையானது முன்னோக்கியதாகவும், வெளிப்புற பார்வையுடையதாகவும், புத்தாக்கத் திறன் மற்றும் நெகிழ்ச்சித்தன்மையுடையதாகவும், சான்றாதாரங்கள் அடிப்படையிலும் வீட்டுத்திட்டத்தை பெற்று கொள்பவர்கள் மட்டில் பின்னூட்டல் பெறுவதுடன் ஒவ்வொரு*

வீட்டுத்திட்ட செயன்முறைகளினூடாக எதிர்கொண்ட சவால்கள் என்பவற்றையும் கண்டறிவதுடன் அதற்கு நல்ல வழியில் தொடர்பாடல்களை ஏற்படுத்தி மதிப்பீடு செய்தால் அதனை தொடர்ந்து மீள்நோக்கி பார்த்தல் என்பவை வீட்டுத்திட்டக் கொள்ளை உருவாக்கத்தின் நல்ல செயன்முறைகளாகும். இவற்றில் ஏற்படுகின்ற தவறுகள் மக்களின் நன்மைகளுக்காக கொண்டுவரப்படுகின்ற வீட்டுத்திட்ட கொள்ளைகள் இடைநிறுத்தப்படு கின்ற வழிமுறைகளுக்குட்படுகின்றது. அவை பிற்பட்ட காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வினை பாதிக்கும் செயன்முறைகளாக அமைகின்றன. இவற்றினை இவ்வாய்வானது நன்கு ஆராய்கின்றது.

**திறவு சொற்கள்:** தேசிய வீடமைப்புத்திட்டம், மாதிரிக் கிராமம், வீட்டுவசதி பற்றாக்குறை, குறைந்த வருமானம்